DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 176/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திருமதி.ஜானகி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 023rd **October2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது நாகர்கோவில் மதுவிலக்கு தடுப்பு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது பத்மாவதி என்பவர் 15.03.2016 ம் தேதி அளித்த புகார் மனுவை பெற்று தலைமைக்காவலர் அமராவதி என்பவர் அந்த புகார் மனுவின் தன்மைக்கேற்ப அனைத்து மகளிர் காவல்நிலையக்குற்ற எண்.3/2016 ச/பி.498 ஏ, 406 இதச மற்றும் வரதட்சணை கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தார். மேற்படி வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நான் சாட்சிகள் பத்மாவதி, சந்திரசேகரன், வீரமணி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.03.2016 ம் தேதி 18.30

மணிக்கு எதிரி ராஜாமோகனை கைது செய்து நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் 1,6 எதிரிகளை தவிர மற்ற எதிரிகளை வழக்கிலிருந்து நீக்கம் செய்து நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சிகள் வைரமுத்து, சமுத்திரம், முத்துசெட்டியார், மாரியப்பன் என்ற பாக்கியராஜ், வழக்கு பதிவு செய்த அமராவதி, மனுவிசாரணை செய்த உதவி ஆய்வாளர் சாந்தி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் ச/பி.498 ஏ, 406 இதச மற்றும் வரதட்சணை கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழ் உள்ள குற்றச்சாட்டுகளை சட்டப்பிரிவுகள் 498 ஏ, 406 இதச மற்றும் வரதட்சணை கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் பிரிவு 4 என மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரிகள் மீது 18.08.2016ம் தேதி ச/பி.498 ஏ, 406 இதச மற்றும் வரதட்சணை கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச்சட்டம் பிரிவு 4 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**